ஸ்டாக்ஹோம் தமிழ்ச் சங்கம்

# மென்பனி



2018

பதிப்பு - 1



# 1 தலையங்கம்

**எளிய நடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்.
இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்.
வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாங் கண்டு
தெளியுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்.
எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்.**

**உலகியலின் அடங்கலுக்கும் துறைதோறும் நூற்கள்
ஒருத்தர் தயை இல்லாமல் ஊரறியும் தமிழில்
சலசலென எவ்விடத்தும் பாய்ச்சிவிட வேண்டும்!
தமிழொளியை மதங்களிலே சாய்க்காமை வேண்டும்.
இலவச நூற் கழகங்கள் எவ்விடத்தும் வேண்டும்.
எங்கள் தமிழ் உயர்வென்று நாம் சொல்லிச் சொல்லித்
தலைமுறைகள் பலகழித்தோம்; குறை களைந்தோமில்லை.
தகத்தகாயத் தமிழைத் தாபிப்போம் வாரீர்!**

**- பாரதிதாசன்**

அனைவருக்கும் வணக்கம்,

சில வருடங்களுக்கு முன்புவரை சுவீடனில் தமிழர்கள் மிக குறைவே. தமிழ் பேச்சு கேட்பது அரிதாகவே இருக்கும். தமிழர்களுக்கென்று ஒரு குழுமம் இருந்தால், நட்பு பாராட்டலாம். தமிழர் பண்பாட்டு விழாக்கள் எடுக்கலாம், தமிழ் மொழி வளர்ச்சிக்கு உதவிடலாம் என்ற எண்ணத்தின் வெளிப்பாடாக ஸ்டாக்ஹோம் தமிழ்ச் சங்கம் உருவானது. தமிழர்களை ஒருங்கிணைப்பதிலும், தமிழர் பண்பாட்டு விழாக்களை கொண்டாடுவதிலும் தமிழ்ச் சங்கம் திறம்பட செயல்படுகிறது. தமிழ் வளர்ச்சிக்கு நம் தமிழ்ச் சங்கத்தின் பங்களிப்பாக குழந்தைகளுக்கான தமிழ் வகுப்பை தொடங்கி நடத்திவருகிறோம். தமிழ்நூல்களை படிக்கவும், புதிய படைப்புகள் படைத்திடவும், அனைவருக்கும் ஆர்வமூட்டிடவேண்டும் என்ற எண்ணத்தில் உருவானது தமிழ்ச் சங்கத்தின் இணைய இதழ். தமிழுக்கும் சுவீடன் நாட்டிற்கும் பொதுவாய் பெயர் தேடிட "மென்பனி" கிடைத்தது.

மென்பனி இதழின் முதல் பதிப்பை வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். மென்பனி சிறப்பாக தொடர தமிழ்ச் சங்கத்தின் உறுப்பினர்களாகிய உங்களின் ஒத்துழைப்பு தேவை. முதல் பதிப்பிற்கு சிறப்பான படைப்புகள் தந்தவர்களுக்கு நன்றி. இனிவரும் பதிப்புகளுக்கும் இது போன்ற சிறந்த படைப்புகள் படைத்திடல் வேண்டும். பிற மொழியில் உள்ள அறிவார்ந்த கட்டுரைகளை, அழகிய வாழ்வியல் கட்டுரைகளை எளிய தமிழில் குழந்தைகளுக்காக படைத்திடல் வேண்டும். படைப்புகள் ஒலி அமைவு வடிவமகவோ,  காணொளி வடிவமகவோ இருந்தாலும் இணைய இதழில் வெளியிடும் வசதி இருப்பதால் உங்கள் கற்பனைக் குதிரைக்கு கடிவாளம் தேவையில்லை. இதழ் குறித்த தங்கள் கருத்துகளை தவறாமல் எங்களுக்கு மின்னஞ்சலில் அனுப்பிவையுங்கள்.

முதல் மென்பனியை அள்ளிப்பருக உங்களைக் அழைக்கிறோம். வாருங்கள்!

- மென்பனி பொறுப்பாளர்கள் குழு



# திருக்குறள்

# ஊக்கம் உடைமை



## உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
## தள்ளினுந் தள்ளாமை நீர்த்து

எண்ணுவதெல்லாம் உயர்வைப்பற்றியே எண்ண வேண்டும், அவ் வுயர்வுக் கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விடக்கூடாது.



3

# கவிதை

# நெல்லும் கொழிஞ்சியும்



ஒற்றை விதையாய்
மண்ணில் புதைந்து,
ஒற்றை மழைத்துளி
புவியைத் தொட்டவுடன்,
புத்துயிர் பெற்று
மானாவாரியில் வேரூன்றி
புதுப் பொலிவு பூண்டு
ஊதா வண்ண பூ பூத்து
பூவெல்லாம் பிஞ்சாகி
பிஞ்செல்லாம் காயாகி
பூவோடும் பிஞ்சோடும்
காயோடும் இலையோடும்
நெல் செழிக்க தழையுரமாய்
உயிர் துறக்கும் கொழிஞ்சி!
சாய்வாய் நட்ட நாற்று,
நிமிர்ந்து நின்று மேனியாகி
தனக்காய் உயிர் துறந்த
கொழிழிஞ்சிக்கு நன்றி செலுத்த
தலை குனிந்த நெற்கதிரை
யான் கண்டவிடம் கழனி!

கு.ப.க.முனீஸ்வரன்

# குழந்தை



கருவாய் நீ என் வயிற்றில்
உருவான நாள் முதலாய்
நித்தம் பல கனவோடு
உன்னை சுமந்தேன்!

ஓருடலில் ஈருயிராய்
என் உயிருக்குள் உயிரானாய்!
தொப்புள்கொடி உறவாக
இனணந்தே இருந்தாய் நீ!

இருட்டறையில் சுருட்டிக்கொண்டு
கதகதப்பாய் இருந்திடுவாய்!
பசி வந்த போதெல்லாம்
என் வயிற்றில் உதைத்திடுவாய்!
நான் உண்ட உணவையெல்லாம்
தொப்புள் கொடி மூலம் ருசி
பார்த்தாய்!

போதும் இந்த இருள் வாசம் என எண்ணி
வெளி உலகில் வரத் துடித்தாய்!

என் உயிர் பிழிந்து
உடல் சதையெங்கும் பிசைந்து
தாங்க முடியாத பெரும் வலியில் துடித்த
அந்நேரம் என் தாயின் வலியுணர்ந்து
அம்மா என்று அலறினேன்!

என் வலியை நீ உணர்ந்துதான்
எனக்காக அழுதுகொண்டே பிறந்தாயோ!

அதுவரை வெறும் கற்பனையாய்
நான் நினைத்த உருவெல்லாம்
ஒருசேர உன்னைப் பார்த்த அத்தருணம்
மறந்தேனே என் வலியெல்லாம்!

மீனாட்சி

# பேரனுக்கு - தாத்தாவின் பதில்



ஏட்டிக்கு போட்டியா,
சிங்கார சீமையிலே,
பணத்தோட வாழும்,
அன்பான  சீமானே!
எம் பாட்டன் காலத்து வாழ்க்கையை கேளையா…
வாட்ட சாட்ட உடம்போடும்,
நரை மீசை முறுக்கோடும்,
முண்டாசு தலையோடும்,
உழைப்பாரு மனுசரு…
வேட்டி மட்டும் கட்டிக்கிட்டு,
வேர்வை தண்ணி சிந்திக்கிட்டு,
சோர்வு வரும் போதெல்லாம்
மோர் தண்ணி குடிப்பாரு.
நாக்கு எப்போதும் நாலு பக்கம் சுழண்டாலும்,
வாக்கு மட்டும் எப்போதும் இவருக்கு சுழலாது,
தூக்கு சட்டியில் சோறுண்ணும் நேரத்தில்
தாகம் என்று வந்தா மோர்கொண்டு தருவாரு.
பசியின்னு தான் கேட்டா,
ருசியாக பந்தி வெச்சு, உறவாக தங்க வெச்சு,
வழி அனுப்பி வைப்பாரு.

ஒரு நாள் தாத்தாவை விளையாட்டா நான் கேட்டேன்…
ஓ! தாத்தா எதுக்காக தமிழ்நாடு பிடிக்குமுன்னு?
அதுக்கான பதிலை தான் தாத்தாவே சொன்னாரு...
நான் பெத்த மகன் தான் பெத்த என் பேரா,
தாலாட்டும் தமிழ்நாட்டில் எனக்கு நீ மட்டும் சொந்தம் இல்ல.
செடியோடு, இலையும் தான்.
மரத்தோடு மண்ணும் தான்.
ஊத்தாக வழிகின்ற மலையோட நீரும் தான்.
தெம்மாங்கு குரலோடு இசைபாடும் குயிலும் தான்.
நாளெல்லாம் நமக்காக வாலாட்டி குரைக்கின்ற நன்றியுள்ள நாயும் தான்.
வானம் தான், பூமி  தான்,
வயலோரம் ஜதி சொல்லும் வயலாடி கிளியும் தான் .
எம் தமிழ்நாட்டு உயிர்களுக்கு,
எல்லாமே சொந்தம் தான் என்று .....

கவியரசி

# மழை விரும்பி

வா மழையே வா!

வான் மழையே வா!
காய்ந்த மண் செழிப்படைய
கார்முகிலாய் வா!
மண்வாசம் மணம் கமழ
தூறலாய் நீ வா!
நட்ட நாற்று மேனியாக
நல்மழையாய் வா!
அணை நிரம்பி அலையடிக்க
அடைமழையாய் வா!
பெரிய குளம் நிரம்பி வழிய
பெருமழையாய் வா!
கண்மாய் நிரம்பி கடலாக
கனமழையாய் வா!
மானாவாரி செழிப்படைய
மாமழையாய் வா!
இறவைக் காடு செழிப்படைய
ஈரமாய் நீ வா!
வெறுங்கிணறும் பொங்கி வழிய
ஊற்றாய் நீ வா!
சோலைக்காட்டு புல் கடந்து
அருவியாய் நீ வா!
யிரை மீனு ஆற்றில் ஓட
ஆடி பாடி வா!
கெண்டை கெழுத்தி குஞ்சு
பொரிக்க
கொஞ்சி கொஞ்சி வா!
பறவை விழுங்கி எச்சமிட்ட
விதை முளைக்க வா!
பயறு பச்சை யாம் விதைக்க
பருவத்திலே வா!
காட்டோடை வெள்ளம் பாய
காலத்திலே வா!
புத்துயிரை புவிக்களிக்கும்
நீர்க்குடமாய் வா!
கிடை மாடு தாகம் தணிக்கும்
கேணி நிறைய வா!
ஆடு மாடு குளித்து மகிழ
தெப்பம் நிறைய வா!
கண்ணாற்றில் நீரோடி
செழிப்படைய வா!
வரப்பு கெட்டி மரமடிக்க
வான் மழையே வா!
சிறுதானியம் நான் விதைக்க
சிறிதேனும் வா!
கோடையிலே மடை திறக்க
கோடையிலும் வா!
பட்டி தொட்டி செழிப்படைய
பரவசமாய் வா!
பட்டணத்தில் பஞ்சம் போக
பரிவுடனே வா!
ஓடி ஆடி உழைத்த மக்கள்
தொண்டை நனைக்க வா!
வட்டிக் கடனை யாம் அடைக்க
வான் மழையே வா!
வைத்த நகையை மீட்டெடுக்க
வா மழையே வா!
மண் குளிர மனம் குளிர
மாமழையே வா!
பல்லுயிரின் தாகம் தீர்க்கும்
தாயவளே வா!

கு.ப.க.முனீஸ்வரன்

# நல்லதொரு சமூகம் செய்வோம்

தாய்மை மறந்த ஆண்மையை புதைப்போம்

தன்மை இழக்கும் ஆண்மையை சபிப்போம்

ஆண்மையில் தாய்மையை போற்றுவோம்

குழந்தை வன்முறைக்கு எதிராக இன்று கை சேருவோம்

நாளைய தலைமுறைக்கு பெண்ணின் மென்மையை கற்பிப்போம்

நல்லதொரு சமூகம் செய்வோம்!

*காயத்ரி ராஜரத்தினம்*






# தலைவரின் கடிதம்

# தலைவரின் கடிதம்



**கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி தமிழ்க் குடி. அக்குடியில் பிறந்த எம் உறவுகளுக்கு எனது அன்பான வணக்கங்கள்.**

பனிக்காலம் முடிந்து உங்களை இந்த இனிய இளவேனில் கால மென்பனியில் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. இந்த இணைய இதழை உருவாக்கக் காரணமாக இருந்த ௨௦கஅ ஆம் ஆண்டின் மேலாண்மை குழுவிற்கும், தொழில்நுட்பத்தில் தோள்கொடுத்த திரு. பிரகாசு இராசேந்திரன் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

உலகத்தின் அனைத்து மொழிகளுக்கும் தாய் செம்மொழியான நம் தமிழ் மொழியாகும். அம்மொழியை உயிர் மூச்சாய் சுவாசிப்பவர்களும் சரி, இதயம் திறந்து நேசிப்பவர்களும் சரி தங்கள் நெஞ்சை நிமிர்த்தி மார்தட்டிக்கொள்ள வேண்டும். ஏனெனில் நம் மொழியின் வனப்பும், நம் இனத்தின் பிறப்பும் அவ்வளவு சிறப்பு வாய்ந்தவை. இதை அறிந்தவர்கள் அறிஞர்கள், அறிய விரும்புவோர்கள் ஞானிகள்.

நாகரீகம், வாழ்வியல், அரசியல், அறிவியல், போர்மறை, யோகம், கலை, கலாச்சாரம், காமம், வீரம் போன்ற ஆய கலைகள் அறுபத்தி நான்கினையும் இவ்வுலகத்திலுள்ள மற்ற இனங்களுக்கு புகட்டி அவ்வினங்களை செழிக்கச் செய்த இனம் நம் தமிழ் இனம். இவ்வுலகத்தை ஒரு காலத்தில் ஆண்ட இனம். ஆனால் இன்றோ அண்டிப்பிழைக்கும் நிலை. யோசிக்க வேண்டிய விடையம். துவண்டுவிடக்கூடாது உறவுகளே! பறந்து கிடக்கும் இவ்வண்டத்தில் வளரும் தமிழ்த் தலைமுறைகள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும்.

அறம் அறிந்து, பொருள் தெரிந்து, காமம் கனிந்து வாழ்ந்த இனம் நம் தமிழ் இனம். நம் முன்னோர்கள் வகுத்த கோட்பாட்டின் பால் நின்று, பழமை கூட்டி, சாதி மதம் கழித்து, புதுமை பெருக்கி, சதியை வகுத்து, வரலாறு படைக்கவேண்டும்.

உலகத்தமிழர்கள் வாழ்வில் இந்த மென்பனி இணைய இதழ் தொடர்ந்து தமிழை பொழியட்டும்! வேரூன்றி தமிழும் வளரட்டும்!

“விரைவில் ஆளுவார்கள் தமிழர்கள்”

நன்றி.

**வாழ்க தமிழ்! வளர்க எம்மக்கள்!!**

ச. இலட்சுமிநாராயணன்,

தலைவர்,

ஸ்டோக்ஹோம் தமிழ் சங்கம்



5

# கதை



# சக்தியின் சாகசங்கள்

*ரவீந்தரன்*

குழந்தைகளே! உங்களைப் போன்ற வயதுடைய பெண்தான் சக்தி. ஆனால் அவளுக்கு சில அபூர்வ சக்திகள் உண்டு. அவற்றை அவள் நல்ல காரியங்களுக்கு மட்டுமே பயன்படுத்துவாள். அவளது அறிவும் ஆற்றலும் ஆச்சரியத்தை ஏற்படுத்தும். அடுத்து என்ன செய்வாளோ என்ற எதிர்ப்பார்ப்பையும் ஏற்படுத்தும். சக்தி அறம்கண்டநல்லூர் கிராமத்தில் வசிக்கும் ஒரு பத்து வயது பெண்.

அவளுடைய கதையை தான் நீங்கள் இப்போது படித்து தெரிந்து கொள்ளப்போகிறீர்கள்.

அத்தியாயம் 1

# சக்தியின் அறிமுகம்

சக்தி அறம்கண்டநல்லூர் கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலை பள்ளியில் நான்காம் வகுப்பு படிக்கிறாள்.

சக்தி அவளுடைய தாத்தா பாட்டி வீட்டில் வசிக்கிறாள். சக்தியின் தாத்தா ஒரு விவசாயி. அவர் பெயர் சுந்தரம். சக்தியின் பாட்டியும் பண்ணையில் விவசாய வேலைகளையும், வீட்டு வேலைகளையும் செய்பவர். அவருடைய பெயர் லட்சுமி.

சக்தியின் அம்மா அப்பா அவளை நான்கு வருடங்களுக்கு முன் கோடை விடுமுறையில் அறம்கண்டநல்லூர் தாத்தா பாட்டி வீட்டுக்கு அனுப்பினார்கள்.

அவர்கள் இருவரும் அந்த கோடை விடுமுறையில் தொழில் நிமித்தமாக

அந்தமான் தீவுக்கு செல்ல கப்பலில் ஏறி சென்றார்கள். ஆனால் எதிர்பாராத விதமாக கப்பல் கடும் புயலில் சிக்கி காணாமல் போய்விட்டது. அரசாங்கம் முடிந்தவரை இந்திய பெருங்கடலில் கப்பலை தேடிவிட்டு, தன் முயற்சியை கைவிட்டுவிட்டது.

சக்தியும் தாத்தா பாட்டி வீட்டிலேயே தொடர்ந்து இருந்துவந்தாள். முதலில் சில நாட்கள் மிகவும் வருத்தத்தோடு அழுதுகொண்டு இருந்தாலும், தாத்தா பாட்டி அவளுக்கு ஆதரவாக இருந்துவந்ததால் மனதை தேற்றிக்கொண்டாள்.

தான் வளர்ந்து பெரியவள் ஆனதும், காணாமல் போன கப்பலை எப்படியும் தேடி கண்டுபிடித்து தன் அப்பா அம்மாவோடு சேர்வேன் என்ற உறுதியோடு சக்தி இருக்கிறாள்.

சக்திக்கு மிகவும் பிடிச்சது சிவப்பு சட்டை, பச்சை பேண்ட். சில சமயம் பச்சை பாவாடையும் அணிவாள். பச்சை பேண்ட் அவளுடைய எட்டாவது பிறந்தநாளின்போது தாத்தா வாங்கி கொடுத்தது. தலையில் இரட்டை சடை போட்டுக்கொள்வதும் அவளுக்கு ரொம்ப பிடிக்கும். அப்பா அம்மா வாங்கி கொடுத்தது என்பதால் காலில் இருக்கும் கொலுசை விரும்பி அணிவாள். ஜல்ஜல் என நடந்து வரும்போது தூரத்தில் வந்தாலும் சக்தியை அவளுடைய நன்பர்கள் கண்டுபிடித்துவிடுவார்கள்.

சக்தி வீட்டில் இரண்டு ஆடுகள், இரண்டு மாடுகள், கோழிகள், பூனை எல்லாம் உண்டு. ரகசியமாக வீட்டில் இருக்கும் பொருட்களை திருடி தின்னும் ஒரு எலியும் உண்டு. தோட்டத்தில் இருக்கும் மரத்தில் குருவி கூடுகளும் உண்டு.

இவர்கள் எல்லாரும் சக்தியின் தோழர்களே..

சக்தியின் பக்கத்து வீட்டில் வசிப்பவர்கள் ஓவியனும், யாழினியும். இவர்கள் இருவரும் இரட்டையர்கள். இவர்களின் தந்தை அறம்கண்டநல்லூர் பள்ளியில் ஆசிரியர். அம்மா வீட்டு வேலைகளையும், அவர்களுக்கு சொந்தமான கோழி வளர்க்கும் பண்ணையையும் கவனித்துக்கொள்கிறார்.

இளம் வயதில் சக்தி எந்த உணவையும் ஆர்வமாக உண்ணுபவள் அல்ல.

ஆனால் லட்சுமி பாட்டி தினமும் காலையில் முட்டை சாப்பிட்டால் அதிக தெம்பாக இருக்கலாம் என்று சொன்னதை ஏற்று, தினமும் ஆரம்பத்தில் ஒரு முட்டை சாப்பிட்டாள் சக்தி. அதன் மூலம் கட்டில் மேசை ஆகியவற்றை அனாயாசமாக அவள் தூக்கியதை கண்டு ஆச்சர்யப்பட்டு, தினமும் காலையில் 5 முட்டைகொடுக்க ஆரம்பித்தார் லட்சுமி பாட்டி.

முட்டை மட்டுமல்ல, எந்த உணவையும் மீதம் வைக்காமல் சாப்பிடுவதால் தான் சக்தி இவ்வளவு பலசாலியாக இருக்கிறாள் என்று தாத்தா சொல்வார்.

என்ன ஆச்சர்யம்..பெரிய பலவான்களே தூக்க கஷ்டப்படும் பொருட்களை எல்லாம் அனாயாசமாக தூக்கி காட்டினாள் சக்தி.

சக்தியின் தாத்தா ஒருமுறை பால் கொண்டுவா என்று கேட்டபோது,

தோட்டத்தில் நின்றிருந்த பசுமாட்டை தூக்கிவந்துவிட்டாள் சக்தி. இப்போது புரிகிறதா, சக்தி எப்படிப்பட்ட பலசாலி என்று ?

வழக்கமாக ஓவியன், யாழினி, சக்தி ஆகிய மூவரும் பள்ளிக்கு நடந்து செல்வது. அவர்கள் வீடு பள்ளிக்கு மிக அருகிலேயே இருந்த சாலையின் முடிவில் இருந்தது. ஆனால் பள்ளிக்கு ஸ்கூல் பஸ்ஸில் வரும் பிள்ளைகளும் உண்டு.

ஓவியன், யாழினியோடு சக்தியின் வீட்டு வாசலில் வந்து பள்ளிக்கு செல்ல அழைத்தார்கள்.

சக்தி !!! சக்தீ...பள்ளிக்கு நேரமாச்சு...என்றாள் யாழினி

படாரென்று ஒரு சத்தம்... வீட்டின் மேலிருந்து பள்ளி செல்லும் பையுடன் திடீரென்று கீழே குதித்தாள் சக்தி !!!

ஓவியன் பயந்தேவிட்டான்.

என்ன இங்கே இருந்து குதிக்கிறாய் என்று அலறினான்.

பக்கத்து வீட்டு மாமா குளித்துக்கொண்டிருக்கும்போது அடித்த காற்றில் அவர் துண்டு பறந்து எங்கள் வீட்டு ஓட்டில் விழுந்துவிட்டது...அதை வீட்டு மேல் ஏறி தூக்கி போட்டேன் என்று கொல்லென சிரித்தாள் சக்தி..

சக்தி, எங்கே அடிக்கிற காற்றில் நான் பறந்துவிடுவேனோ என்று பயமாக இருக்கிறது என்றாள் யாழினி.

அத்தோடு சக்தியின் கையை வேறு கெட்டியாக பிடித்துக்கொண்டாள்..

வீதியில் இருந்து சாலைக்கு வந்தார்கள் மூவரும்.

சாலையிலும் காற்றின் வேகம் கடுமையாகவே இருந்தது.

இன்றைகென்று பார்த்து காற்றின் வேகம் மிகவும் கடுமையாக இருந்தது.

சாலைகளில் மரங்கள் அப்படியும் இப்படியும் ஆடின. இரை தேடி பறந்த பறவைகள் கூட்டுக்கு திரும்ப முடியாத வகையில் காற்றின் வேகம் அதிகமாக இருந்தது. பறவை குஞ்சுகள தாய் பறவைகளை தேடி கத்தும் சத்தம் அதிகமாக இருந்தது.

ஆடுகளும் மாடுகளும் சாலையில் கத்தியபடி ஓடின..

இலைதழைகள், சருகுகள் காற்றில் பறந்து முகத்தில் அடித்து, சாலையே போர்க்களமாக இருந்தது..

சிறிது தூரம் கஷ்டப்பட்டு நடந்தபிறகு தான் கவனித்தார்கள், சாலையின்

ஓரத்தில் இருந்த மிகப்பெரிய மரம் ஒன்று கடுமையாக ஆடிக்கொண்டிருந்தது.

கிட்டத்தட்ட சாயும் நிலைக்கு வந்துவிட்டது...

சக்தி ஓடிப்போய் அதை தாங்கி பிடித்தாள்...

சக்தி ஜாக்கிரதை, மிகப்பெரிய மரம்...சத்தமாக கத்தினாள் யாழினி...

ஓவியன் பரபரப்பாக கத்தினான்.. நான் உடனே ஓடிப்போய் அப்பாவிடம் சொல்லி ஆட்களை அழைத்து வரச்சொல்கிறேன்...

உடனே வீட்டுக்கு போகும் தெருவை நோக்கி ஓடவும் தொடங்கினான்...

சாலையில் மரம் விழுந்துவிட்டால் பள்ளிக்கு வரும் ஸ்கூல் பஸ் இதற்கு மேல் போக இயலாது என்று யாழினி நினைத்தாள்.

அதை விட, இவ்வளவு பெரிய மரத்தை தாங்கி பிடிக்கும் அளவுக்கு சக்தி பலசாலியாக இருப்பதை நினைத்து ஆச்சர்யப்பட்டாள்...

சக்தி மரத்தை இரு கைகளாலும் கட்டி பிடித்து பூமியில் பலம் கொண்ட

மட்டும் அழுத்த, ஏற்கனவே வீசிய கடும் சூறைகாற்றினால் வேர்கள் பலகீனமான அந்த மரம் மேற்கொண்டு சாயாமல் நின்றது..

அத்தோடு நில்லாமல் மரத்தை நேராக ஆக்கும் வகையில் பலம் கொண்ட மட்டிலும் தள்ளினாள் சக்தி..

ஒரே நிமிடத்தில் மரம் மீண்டும் பழைய நிலைக்கு வந்தது.

வீசிய சூறைக்காற்று சற்று நேரத்தில் தன் வேகத்தை தணித்துக்கொண்டது...மிகப்பெரிய சத்தம் இப்போது இல்லை. மெல்லிய காற்று வீசியது.

வீட்டுக்கு ஓடிப்போன ஓவியன், அவனது தந்தையுடனும் சில ஆட்களுடனும் வர, அவன் தந்தை சக்தி ஆடும் மரத்தை அழுத்தி நடுவதை கண்டு மிகவும் ஆச்சர்யமடைந்தார்....ஆனாலும் அவ்வளவு பெரிய மரத்தை சக்தி எப்படி தாங்கி பிடித்திருக்க முடியும் என்று அவருக்கு சந்தேகம் இருந்தது.

ஓவியன், மரம் விழப்போகிறது என்றாயே ? பொய் சொன்னாயா என்றார்

கோபமுடன். இல்லை அப்பா யாழினியிடம் உறுதி படுத்திக்கொள்ளுங்கள். சக்தி விழவிருந்த மரத்தை தாங்கி பிடித்து மீண்டும் நட்டுவிட்டாள் என்று உறுதியாக சொல்லமுடியும் என்றான் ஓவியன்.

அவர் பள்ளிக்கு சென்று மற்ற ஆசிரியர்களிடமும், மாணவர்களிடமும்

சக்தியின் சாகசத்தை சொல்ல, சக்தியின் புகழ் பள்ளி முழுவதும் பரவியது.

பள்ளி தலைமை ஆசிரியர் சக்தியை அழைத்து, அவளது தீரச்செயலுக்காக

பாராட்டினார்.

இந்த வாரம் சக்தியை உங்களுக்கு அறிமுகம் செய்து வைத்தாயிற்று. அப்புறம் அவளோட அருமையான ஒரு சாகசத்தையும் பார்த்தீங்க. சாலையில் மரம் விழாமல் தடுத்து யாருக்கும் ஆபத்து ஏற்படாமல்

காப்பாற்றியதோடு, அந்த மரத்தை அதே இடத்தில் வைத்துவிட்டாள்...அருமை தானே ?

அடுத்த வாரம் சக்தியோட இன்னொடு சாகசத்தோடு நான் உங்களை

சந்திக்கிறேன்.

அத்தியாயம் 2. **குளத்தில் காத்த சக்தி !**

அடுத்த பதிப்பில்....



6

# கட்டுரை

சுகந்தி

# இயற்கையோடு ஒரு நடை

பரடைசத் (paradiset) பெயரிற்கு ஏற்றாற்போல் சொர்க்கமாக காட்சியளிக்கிறது இவ்விடம்.

சுடாக்கோம், உதிங்கேவில் உள்ளது இவ்விடம்.

இயற்கை எழில் கொஞ்சும் காடு, அதன் இடையே ஏரி என மனதிற்கு மகிழ்ச்சியளிக்கிறது. ஒரு நாள் சுற்றுலாவிற்கு ஏற்ற இடம். நீச்சல் செய்வதற்கு, கிரில் செய்வதற்கு ஏற்ப வசதிகள் செய்யப்பட்டுள்ளது.







மிக அருமையாக வரையறுக்கப்பட்ட 5,6 மற்றும் 9 கிலோமீட்டர் நடைபதைகள் உள்ளன. ஆங்காங்கே ஓய்வெடுப்பதற்கு வசதியாக சிறிய அறைகள்/குடிசைகள் உள்ளன. துயிற்பை (sleeping bag) இருந்தால் ஒரு நாள் இரவு தங்கலாம். இவ்வறைகளுக்கு கட்டணம் மற்றும் முன்பதிவு கிடையாது.

ஆகையால் முன்வருவோர்க்கு முன்னுரிமை. அங்கு சென்றடைவதும் எளிது.

பேருந்தில்- எண் 709-உதிங்கே ரயில் நிலையத்தில் இருந்து புருக்கெட் (Bruket) நிறுத்தம், அங்கிருந்து சுமார் 1.5 கீலோமீட்டர் நடை.





# நூல் அறிமுகம்

# பண்பாட்டு அசைவுகள்

பண்பாட்டு அசைவுகள்

**தொ. பரமசிவன்**

தொ பா என்று அழைக்கப்படும் பேராசிரியர் தொ.பரமசிவன் தமிழகத்தின் முன்னனி ஆய்வாளர்களுள் ஒருவர். இவருடைய பிற நூல்கள் “அழகர் கோயில்”, “அறியப்படாத தமிழகம்”. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராக பணியாற்றியவர்.

தமிழர் நிலத்தின் பண்பாட்டு வரலாற்றை சான்றுகளோடு விளக்கும் நூல். தமிழ் மொழி, வாழ்விடம், இறைவழிபாடு, விளையாட்டுகள் போன்ற பண்பாட்டின் பன்முக கூறுகளை விளக்கியுள்ளார் தொ.ப அவர்கள்.

“எண்ணெய்” என்று ஏன் பெயர் வந்தது?
“தம்பி” என்ற சொல்லுக்கு என்ன பொருள்?
“பல்லாங்குழி” விளையாட்டின் வரையறை என்ன?

இப்படி பல கேள்விகளுக்கான பதில்கள் இந்நூலில் கொட்டிக்கிடக்கின்றது.

*பரிந்துரை*

*சுரேஷ்*



# வெண்முரசு




*பரிந்துரை*

*பிரகாஷ்*

வெண்முரசு

**ஜெயமோகன்**

நூல்கள் நம்மை நாமறியாத வேறொரு தளத்துக்கு கடத்தி செல்லும் கடைவாயில்கள் (Portals).

சில தளங்கள் நினைவில் நிற்காமல், நேரத்தின் அருமையை இழப்பினால் தெரியப்படுத்துபவை.

சில தளங்கள் உலுக்கி எழுப்பி நம் இயல்பை நினைவூட்டுபவை.

சில நூல்கள் நம் மெய்மையை மறக்க செய்து வேறொரு தளத்திற்கு இழுத்து சென்று திரும்பி வரும் வழியை மறக்க செய்பவை.

திரும்பி வந்த பின் எது மெய்மையான இயல்பு, எது எண்ணத்தின் இயல்பு என்பதை பிரித்தறிய நம் ப்ரயத்தனத்தை கேட்பவை.

வெண்முரசு, நம்மை கடத்தி செல்லும் கடைவாயில்கள் கண்ணி வெடிகளாய் கொட்டி கிடக்கும் களஞ்சியம்.

வாருங்கள், தொலைந்து செல்ல!




8

# புகைப்படம்



இடம்: Sollentuna
பெயர்: பிரகாஷ்
கருவி:Canon 550D



இடம்: Södermanland
பெயர்: காளிபிரசாத்
கருவி: அலைபேசி



இடம்: யுக்கோசுயார்வி
பெயர்: வைரமயில்.ச
கருவி: கானன் சංடி



இடம்: Vällingby
பெயர்: சுரேஷ்
கருவி: iPhone 5S


கலை

# கோலம்

மீனாட்சி



5 புள்ளி 1-ல் நிறுத்தவும்
5 புள்ளி 1-ல் நிறுத்தவும்
5 புள்ளி 1-ல் நிறுத்தவும்
5 புள்ளி சந்து - 3ல் நிறுத்தவும்
7 புள்ளி -1ல் நிறுத்தவும்
8 புள்ளி 2-ல் நிறுத்தவும்



10

# ஓவியம்

# என் குடும்பம்




நித்யஸ்ரீ வயது 9



சஜாதா



சாதனா, வயது 10




11

# அறிவிப்புகள்




நிகழ்ந்தவை

இடம்: Årsta folkethus
நாள்: 27.01.2018

# தமிழர் திருநாள் & 2018 ஆண்டு பொதுக்குழு

தமிழர் திருநாள் பொங்கல் மற்றும் பொதுக்குழுவிற்கு வருகை தந்து விழாவினை சிறப்பித்த அனைவருக்கும் எங்களின் நெஞ்சார்ந்த நன்றிகள்!!

கலை நிகழ்ச்சிகளில் ஆர்வமுடன் பங்கேற்ற குழந்தைகள் பெரியவர்கள் அனைவருக்கும் எங்களின் பாராட்டுக்கள் .

பொதுக் குழுவில் கலந்துக்க கொண்டு சங்கத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு பங்கேற்ற அனைத்து நல்ல உள்ளங்களுக்கும், விழா ஆரம்பம் முதல் இறுதி வரை உடனிருந்து உதவிய தன்னார்வலர்களுக்கும் ஸ்டோக்ஹோம் தமிழ் சங்கம் கனிவான நன்றிகளை தெரிவித்துகொள்ள்கிறது.

சிறப்பு குறிப்பு: சங்கத்தின் வளர்ச்சிக்கு நிதி உதவி வழங்கிய ஐயா. திரு. இரத்தினம் அவர்களுக்கு எங்களின் ஆத்மார்த்தமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் அறுசுவை உணவு வழங்கிய சரவண பவன் உணவகம் மற்றும் உணவை கொண்டு வர உதவிய N Groceries நிறுவனத்திற்கும் ஸ்டோக்ஹோம் தமிழ் சங்கத்தின் சார்பில் எங்களின் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறான மகிழ்ச்சியான தருணங்கள் என்றென்றும் தொடரட்டும் !!...



வரும் நிகழ்வு

இடம்: Kungsträgården
நாள்: 26.05.2018

# NAMASTE STOCKHOLM - 2018

ஸ்டாக்ஹோமில் இருக்கும் இந்திய தூதரகம் நமஸ்தே ஸ்டாக்ஹோம் நிகழச்சியை 26 மே 2018 ஆம் தேதி குங்ஸ்ட்டராகோர்டனில் நடத்தவிருக்கிறது.

தமிழ்/தமிழர் பண்பாடுகளை அனைவருக்கும் அறிமுகம் செய்து பரப்பும் விதமாக ஸ்டக்கோம் தமிழ் சங்கம் அதில் பங்கேற்கிறது. இதற்கு நமக்கு 10-12 நிமிட நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நமஸ்தே ஸ்டாக்ஹோம் - குறிப்பு:  ஸ்டாக்ஹோமில் இந்தியாவின் பல்வகை கலை மற்றும் கலாச்சாரத்தை காட்சிப்படுத்தும் வாய்ப்பு!

யோகா, நடனம், கலை, கைவினைப்பொருட்கள் சந்தைப்படுத்துதல், சொற்பொழிவுகள் மற்றும் இந்திய உணவு வகைகளை காட்சிப்படுத்துதல் பொருட்டு பல்வேறு அமைப்புகள், நடனக் குழுக்கள் மற்றும் நிறுவனங்கள் அழைக்கப்படுகின்றன.

ஸ்டாக்ஹோம் தமிழ் சங்கம் 2015 முதல் இந்த நிகழ்வில் பங்கேற்றுவருகிறது. கீழே உள்ள இணைப்புகளில் முந்தைய நிகழ்ச்சிகளை காணலாம்.

NS 2015: https://www.youtube.com/watch?v=c31c1v-jdM4

NS 2016: https://www.youtube.com/watch?v=dQ9syZULync

NS 2017: https://www.youtube.com/watch?v=vKozzLgkXPc



வரும் நிகழ்வு

இடம்: பின்னர் அறிவிக்கப்படும்
நாள் : பின்னர் அறிவிக்கப்படும்

# கோடை விழா - 2018

ஸ்டாக்ஹோம் தமிழ்ச் சங்கம், சிறுவர் மற்றும் பெரியவர்களுக்கான விளையாட்டு போட்டிகளை கோடை காலத்தில் திறந்தவெளி பூங்காவில் நடத்திடும். இது குறித்து மேலும் விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தொடர் நிகழ்வு

இலச்சினை வரைகலை :மோஹனா

இடம்: பின்னர் அறிவிக்கப்படும்
நாள் : பின்னர் அறிவிக்கப்படும்

# SKILL UP

ஸ்டாக்ஹோம் தமிழ் சங்கம் திரு செந்தழல் ரவி மற்றும் தன்னார்வலர்களுடன் இணைந்து பணிவாய்ப்புகள் / கல்வி சம்பந்தமான "ஸ்கில்லப் - SkillUp" வகுப்புகள் நடத்திவருகிறது.

இது முற்றிலும் சேவை நோக்கத்துடன் நடத்தப்படும் விலையில்லா சேவையாகும்.

திரு. செந்தழல் ரவி குறிப்பிட்டபடி திட்டத்தின் நிகழ்ச்சி நிரல் இங்கே உள்ளது.

1. தற்குறிப்பு (RESUME / CV) தயாரித்தல் மற்றும் மதிப்பாய்வுரை (REVIEW).

2. தங்கள் துறை குறித்த பயிற்சி.

3. எண்ணியல் சந்தைப்படுத்தல் வகுப்பு (Digital Marketing course). கூகிள் இலவசமாக தருவது.

4. புலனுணர்வு திறன் சோதனைகள் (Cognitive Ability Test).

5. துறை சார்ந்த இலவச காணொளிகள்.

6. மாதிரி நேர்காணல்கள் (Mock Interviews).

7. நேர்காணல்கள் ஏற்பாடு செய்ய நுகர்வோர் / பன்னாட்டு நிறுவனங்களை தொடர்பு கொள்வது.

இதில்  உறுப்பினர்கள் பலர் வகுப்புகளிலும் கலந்துரையாடல்களில் ஆர்வமாக கலந்து கொண்டு பயனடைந்து வருகின்றனர். முதல் கலந்துரையாடலில் விவாதிக்கப்பட்ட தலைப்புகள் இதோ .

1. தொழில்நுட்ப துறையில் வருங்காலம் எது ? (ஏ.ஐ / ஐஓடி / பிக் டேட்டா)
2. செலினியம் (டெஸ்ட்டிங் துறை)
3. தலைமைப்பண்பு
4. இணையவழி விற்பனை / மெய் நிகர் உலக தரவு மேலாண்மை / சமூக ஊடக மேலாண்மை (Content Management / Digital Marketing / Social Media management )
5. ரெஸ்யூம் / வேலை விண்ணப்பம் தயாரிப்பு மற்றும் அதன் அழகியல்
6. சுவீடன் நாடு தரும் வாய்ப்பு என்ன (கல்வி / பணி)
7. சொந்த நிறுவனம் நடத்தும் வாய்ப்புகள் / Billing the Customers via Companies like Cool Company.

இந்த வகுப்புகளில் சேர ஆர்வமிருப்பின் stockholmtamilsangam@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு தங்கள் விவரங்களை அனுப்பவும்.



12

# விளம்பரதாரர்கள்

## NGROCERS

We thrive to bring the best ingredients from India, right to your doorstep. With a wide variety of authentic regional grocery and spice products, we strive to reconnect people with the familiar flavors of India.

we're committed to sharing what we know best about our Indian heritage and culture: our food. We hope to continue to educate and expose the Indian expats  to the regional diversity of India and the richness of our culture and our food.  We are devoted to bringing in and displaying the great Indian tradition of personal service and exceptional quality. We guarantee that only the best spices and freshest foods will end up on your table. From our store to your plate, we hope to share the rich traditions of our country with your family.

Ngroceries is a Stockholm based grocery retail store that focuses on flavors and foods found in in the Indian sub-continent . We offer a full line of groceries including dry groceries s, frozen items and fresh vegetables and fruits.

Many Indian traditions and beliefs are directly related to the foods we eat and the dishes we prepare. With the strict vegetarian diets found in many areas of India, ingredients like dals, lentils, and rice are nutritional cornerstones of Indian cuisine. The culinary diversity of India's various regions is tied together by a common thread; no Indian meal would be complete without the intense flavor of aromatic, all-natural Indian spices.

http://www.ngroceries.com/

For Contact: Chenna Kesava

## சித்திரம் TV

உங்களுக்கு பிடித்தமான திரைப்படங்கள் தொலைக்காட்சி தொடர்கள் மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை ஒரே காட்சி அணுக்கப்பெட்டி (set top box) மூலமாக பார்த்து மகிழ சித்திரம் TV.

35க்கும் மேற்பட்ட தமிழ் தொலைக்காட்சி அலைவரிசைகளையும் (channel) 100க்கும் மேற்பட்ட பிறமொழி தொலைக்காட்சி அலைவரிசைகளையும் பார்த்து மகிழ சித்திரம் TV.

திரைப்படங்கள், பாடல்கள், விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் குழந்தைகளுக்கான நிகழ்ச்சிகளையும் பார்த்து மகிழ சித்திரம் TV.

தமிழ்ப் புத்தாண்டினை முன்னிட்ட சிறப்பு விலைச்சலுகையாக ஒரு வருட சந்தா 1000 SEK மட்டுமே.

இந்த விலைச் சலுகை ஏப்ரல் மாதம் மட்டுமே.

இன்றே முந்துங்கள்

தொடர்புக்கு

கீர்த்தி

http://www.chitramtv.se/

SARAVANAA BHAVAN®
(A CHAIN OF HIGH QUALITY VEGETARIAN RESTAURANTS)

தொடர்புக்கு: அருண் மோகன்

HUSÉNS BILSKOLA

Fruängens Bilskola

தொடர்புக்கு: இளங்கோவன்

TAMILFILM

தொடர்புக்கு: கதீசன்



# பின்னூட்டம்

# பின்னூட்டம்

மென்பனி இதழ் குறித்த தங்கள் கருத்துகளை stsmenpani@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள்.

ஸ்டாக்ஹோம் தமிழ்ச்சங்கம் குறித்த தங்கள் கருத்துகளை stockholmtamilsangam@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள்.

ஸ்டாக்ஹோம் தமிழ்ச்சங்கத்தின் வலைதளம்:

http://stockholmtamilsangam.se/

© Stockholm Tamil Sangam

